[திரு. பு.செ. முத்துச்செல்வன்] [1970 ஆகஸ்ட் 25

அடுத்தபடியாக, தமிழக மின்சார வாரியம், கிராமப் பகுதிகளில் விளக்குகளுக்குத்தான் மின்சாரம் வழங்குகிறது, விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் வழங்கப்படவில்லையென்ற குறைபாடு சொல்லப்படுகிறது. ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் அப்படிப் பட்ட நிலைமை இருக்கலாம். விளக்குகளுக்கு மின்சாரம் வழங்கு வது எவ்வளவு முக்கியம் என்று கருதுகிறோமோ, அந்த அளவிற்கு விவசாயத்திற்கும் மின்சாரம் முக்கியம் என்று கருதி தக்க நட வடிக்கைகளை எடுப்பதற்காக, தக்க அதிகாரிகளை அதிகமாக நியமித்தும், தேவையான பொருட்களை உடனடியாக தருவித்தும் விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத் தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாடு மாநில நிலவள வங்கி மின்சார வசதி களைப் பெறுவதற்காக நிரம்ப கடன் உதவி செய்து வருகிறது. அந்தமாதிரியான கடன் உதவி பெறுகிற பகுதிகளுக்கு மின்சார வாரியம், விவசாய பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் தருகிறோம் என்று சொல்லி ஏற்றுக்கொண்டிருப்பதாக அறிகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

(8) நீத்தார் நினைவுக் குறிப்பு

முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பேரவைக்கு ஒரு வருந்தத்தக்க செய்தியை அறிவிக்க வேண்டிய நிலையில் இருக்கி றேன். இந்த மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் இன்று இயற்கை எய்தினார்கள் என்ற செய்தியை மிகவும் வருத்தத்தோடு தெரிவித் துக்கொள்கிறேன். அன்னாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் இந்தப் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை இந்த அளவில் நிறுத்தி, பேரவையை ஒத்திவைக்கிறேன்.

பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(9) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. *Statutory Rules and Orders.*

@213. Notification issued with G.O. Ms. No. 624, Home, dated the 24th March 1970, in regard to exemption from payment of tax leviable in respect of the vehicle bearing registration number MYQ 266, belonging to the Co-operative for American Relief everywhere, incorporated, Madras. [Laid on the Table of the House under Section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]